புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 242 • 08-03-2026 • ஞாயிறு • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி- புதுச்சேரி
• Volume 01 • Issue: 242 • 08-03-2026 • Sunday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy-Puducherry

## இலங்கை அருகே ஈரான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது: அமைச்சர் ஜெய்சங்கர்



புதுடெல்லி: மார்ச்.8–

இலங்கை அருகே ஈரான் கப்பலான ஐஆர்ஐஎஸ் தேனா மூழ்கடிக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது என்றும், ஐஆர்ஐஎஸ் லாவனுக்காக ஈரானியர்கள் கோரிக்கை விடுத்தபோது மனிதாபிமான அணுகுமுறையை மேற்கொண்டோம் என்றும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து இன்று ரைசினா உரையாடலில் இந்தியப் பெருங்கடலில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்ஜெய்சங்கர்,“சர்வதேச கடற்படை மதிப்பாய்வில் பங்கேற்ற ஈரானின் ஐஆர்ஐஎஸ் லாவன் கப்பல், தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொண்ட பின்னர் கொச்சியில் நிறுத்தப்பட்டது. இலங்கைக்கு தெற்கே ஐஆர்ஐஎஸ் தேனா மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்பு இந்தியாவை ஈரான் அணுகியது. பிப்ரவரி 15 முதல் பிப்ரவரி 25 வரை நடந்த சர்வதேச கடற்படை மதிப்பாய்வின் ஒரு பகுதியாக அக்கப்பல் இந்தப் பகுதியில் இருந்தது.

அந்த நேரத்தில் எங்கள் நீர்நிலைக்கு மிக அருகில் இருந்த ஐஆர்ஐஎஸ் லாவன் கப்பல் எங்கள் துறைமுகத்திற்குள் வர விரும்புவதாக ஈரானிய தரப்பிலிருந்து எங்களுக்கு பிப்.28ஆம் தேதி ஒரு செய்தி வந்தது. அவர்கள் தங்களுக்கு சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவித்தனர். மார்ச் 1 ஆம் தேதி, “சரி, நீங்கள் உள்ளே வரலாம்“ என்று நாங்கள் சொன்னோம். பின்னர் அவர்கள் கொச்சி வந்து சேர்ந்தனர்.

மேலும் கப்பலின் 183 இளம் பணியாளர்கள் தற்போது கொச்சியில் உள்ள கடற்படை தளத்தில் தங்கியுள்ளனர். அவர்கள் புறப்பட்டு இங்கு வந்தபோது, நிலைமை முற்றிலும் வேறுபட்டது. அவர்கள் ஒரு கடற்படை மதிப்பாய்வுக்காக வந்தனர், பின்னர் அவர்கள் நிகழ்வுகளின் தவறான பக்கத்தில் சிக்கிக் கொண்டனர்.

எனவே, இந்தக் கப்பல் சிரமத்தில் சிக்கி உள்ளே வர விரும்பியபோது, அனுமதித்தது மனிதாபிமான செயல் என்று நான் நினைக்கிறேன். இன்னொரு கப்பல் இலங்கையில் மூழ்கடிக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. எனவே, சட்ட சிக்கல்கள் எதுவாக இருந்தாலும், மனிதாபிமானத்தின் பார்வையில் நாங்கள் அதனை அணுகினோம் என்று நான் நினைக்கிறேன். வேறு என்ன சட்ட சிக்கல்கள் இருந்தாலும், நாங்கள் சரியானதைச் செய்தோம் என்று நான் நினைக்கிறேன்” என்று அமைச்சர் கூறினார்.

## திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள், வெல்லும் தமிழ்ப் பெண்களாக வரலாறு படைத்து வருகின்றனர்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் மகளிர் தின வாழ்த்து



சென்னை: மார்ச்.8–

உலக மகளிர் தினத்தையொட்டி பெண்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். உலக மகளிர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. நாளை மகளிர் தினத்தையொட்டி அரசியல் தலைவர்கள், பெண்களுக்கு வாழ்த்து கூறி வருகின்றனர்.

இந்நிலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது வாழ்த்துச் செய்தியில்,

“உலகை இயக்கும் பேராற்றலான என் அன்புக்குரிய தாய்மார்கள், சகோதரிகள் அனைவருக்கும் இனிய உலக மகளிர் நாள் வாழ்த்துகள்!

“பெண் ஏன் அடிமையானாள்?” எனக் கேள்வியெழுப்பி விழிப்புணர்வை ஏற்படுத்தினார் தந்தை பெரியார். அவரது கொள்கை வழித்தோன்றலாக கலைஞர் பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உரிமை அளித்துச் சட்டம் நிறைவேற்றினார், அரசுப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு அளித்தார். இத்தகைய பெண்ணினக் காவலர்களின் வழியிலான நமது திராவிட மாடல் அரசு இந்த ஆட்சியையே மகளிரின் உயர்வுக்கான ஆட்சியாக நடத்தி வருகிறது.

பெண்கள் சுதந்திரமாக ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்குச் சென்று வர விடியல் பயணம், அவர்களின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், அவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் புதுமைப்பெண், அவர்களின் சமையல் சுமையைக் குறைக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அவர்கள் பாதுகாப்பாகத் தங்க, தோழி விடுதிகள், தனியார் தொழிற்சாலைகளிலும் அவர்களுக்குக் குறிப்பிட்ட விழுக்காட்டில் பணியிடங்கள் ஒதுக்கீடு, பெண்களின் பெயரில் சொத்துப்பதிவு செய்தால் பதிவுக் கட்டணத்தில் சலுகை, 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாகக் கருப்பைவாய்ப் புற்றுநோய் தடுப்பூசி, ஆதிதிராவிட பழங்குடியினப்பெண்களுக்கான நன்னிலம் நிலவுடைமைத் திட்டம், திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம், பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புக்காக உலக வங்கியுடன் இணைந்த தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்(TN-WESAFE) திட்டம், கிராமப் புறங்களில் இருந்தும் பெண் தொழில் முனைவோர்களை வளர்த்தெடுக்கும் TNRISE திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களால் நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டு மகளிர், வெல்லும் தமிழ்ப் பெண்களாக வரலாறு படைத்து வருகின்றனர்

அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், மகளிர் உரிமைத்தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் எனவும் இப்போதே அறிவித்துள்ளதுடன், மூன்று மாதங்களுக்கான தொகையை முன்பணமாகவும், 2 ஆயிரம் ரூபாயைக் கோடைக்காலச் சிறப்பு நிதியாகவும் தமிழ்நாடு முழுவதும் 1.31 கோடி மகளிரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்து அவர்கள் மனம் மகிழச் செய்துள்ளோம்.

தரமான கல்வியும், உயர் வேலைவாய்ப்புகளும் தன்னிறைவும், பொருளாதாரச் சுதந்திரமும், அனைத்துக்கும் மேலாக சிறந்த உடல்நலனும் கொண்டவர்களாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிரையும் உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் உறுதியாக அடைவோம் என கூறியுள்ளார்

## தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஆக.30 வரை டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு

சென்னை: மார்ச்.8–

தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஆக.30 வரை டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெற உள்ளது. இதில் 1.20 லட்சம் பணியாளர்கள் 33 கேள்விகளுடன் வீடுவீடாகச் சென்று தரவுகளை சேகரிக்க உள்ளனர்.

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வந்தது. கடைசியாக 2011ம் ஆண்டு நடைபெற்றது. அதைத்தொடர்ந்து, 2021ம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரோனா பரவல் காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி தள்ளிவைக்கப்பட்டது.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று நாடு முழுவதும் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என மத்திய அரசு கடந்த ஆண்டு ஜூன் மாதம் அறிவித்தது. அதன்படி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடி, மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 நடத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

இப்பணிகள் ரூ.11,718.24 கோடியில் இரு கட்டங்களாக நடத்தப்படும் என்றும், முதற்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டு 2026 ஏப்ரலில் தொடங்கி, செப்டம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்பணியில் 30 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மத்திய அரசு உத்தரவுப்படி, தமிழகத்தில் நடைபெறும் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஜூலை 31ம் தேதி வரை மக்கள் சுயமாக மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்களை இணையவழியில் பதிவிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆக.1 முதல் 30ம் தேதிக்குள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியில் அரசு ஆசிரியர்கள், களப்பணியாளர்கள், மாவட்டம், துணை மாவட்டம் மற்றும் மாநில அளவிலான பிற மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் என சுமார் 1.20 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

தங்கள் வழக்கமான பணிகளுடன் கூடுதலாக மக்கள் தொகை கணக்கெடுப்பின் களப்பணியையும் செய்வார்கள். அதற்காக அவர்களுக்கு மதிப்பூதியமும் வழங்கப்பட உள்ளது.

இந்த கணக்கெடுப்பில், வீட்டுவசதி நிலை, வசதிகள் மற்றும் சொத்துகள், வீட்டு உறுப்பினர்கள் எண்ணிக்கை, மதம், எஸ்சி மற்றும் எஸ்டி, மொழி, எழுத்தறிவு மற்றும் கல்வி, பொருளாதார செயல்பாடு, இடம்பெயர்வு உள்ளிட்ட 33 கேள்விகளுடன் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட உள்ளன. டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக, மக்கள்தொகை கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (சிஎம்எம்எஸ்)போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு வங்க ஆளுநராக மாற்றப்பட்டுள்ள ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து: தலைமை நீதிபதியையும் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்



சென்னை: மார்ச்.8–

மேற்கு வங்க மாநிலத்திற்கு மாற்றப்பட்டுள்ள ஆளுநர் ஆர்.என். ரவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். சென்னை உயர் நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்ற எஸ்.வி. தர்மாதிகாரியையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். சென்னை உயர் நீதிமன்றத்தின் 55வது தலைமை நீதிபதியாக மத்திய பிரதேசத்தை சேர்ந்த சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி நேற்று பதவியேற்றார். ஆளுநர் மாளிகையில் நடந்த பதவியேற்பு விழாவில் புதிய தலைமை நீதிபதிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் ரகுபதி, துணை சபாநாயகர் பிச்சாண்டி, தலைமை செயலாளர் முருகானந்தம், டிஜிபி வெங்கடராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை ஆளுநர் மாளிகை தலைமை நீதிபதி எஸ்.வி.தர்மாதிகாரியை மரியாதை நிமித்தமாக சந்தித்து அவருக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மேற்கு வங்காள மாநிலத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை ஜனாதிபதி திரவுபதி முர்மு அளித்துள்ளார். கடந்த 2021 செப்டம்பர் 18ம் தேதி தமிழகத்தின் 26வது ஆளுநராக ஆர்.என்.ரவி பதவியேற்றார். ஆளுநராக பதவியேற்றது முதல் தமிழக அரசுக்கு தொடர்ந்து பல்வேறு நெருக்கடிகளை கொடுத்துவந்தார். குறிப்பாக தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டார். இது கடும் விமர்சனத்திற்கு உள்ளானது.

உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டின் அடிப்படையில் சில மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தார். நீதிமன்றமும் சில மசோதாக்களை தாமாக முன்வந்து நிறைவேற்றி உத்தரவிட்டது. அது மட்டுமல்லாமல் தமிழக சட்டப் பேரவையில் ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்தில் நடைபெறும் ஆளுநர் உரையை படிக்காமல் புறக்கணித்துவந்தார். அவர் பங்கேற்கும் அரசு விழாக்களில் தமிழக அரசுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வந்தார். பல்கலைக் கழகங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும், அரசு விழாக்களிலும் சனாதன தர்மம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசி வந்தார். இந்த சர்ச்சைகளால் பட்டமளிப்பு நிகழ்ச்சிகளில் ஆர்.என்.ரவி கையால் பல மாணவ, மாணவிகள் பட்டங்களை வாங்காமல் மேடையிலேயே புறக்கணித்தனர்.

பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்ற முறையில் பேராசிரியர்கள், சிண்டிகேட் உறுப்பினர்கள் நியமனங்களில் தலையிட்டார். இதனால், முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் ஆளுநரை முதல்வர் விமர்சித்து வந்தார். அவர் தமிழகத்தில் இருக்கும்வரை திமுகவுக்கு நல்லது என்று முதல்வர் வெளிப்படையாகவே பேசிவந்தார். தேர்தல் வரை ஆர்.என்.ரவி தமிழகத்தில் கவர்னராக தொடர வேண்டும் என்று கூறியிருந்தார். இந்த நிலையில் கடந்த வாரம் ஆர்.என்.ரவியை மேற்கு வங்க ஆளுநராக நியமனம் செய்து ஜனாதிபதி திரவுபதி முர்மு உத்தரவிட்டார். சட்டமன்ற தேர்தலுக்கு ஒரு மாதம் இருக்கும் நிலையில் ஆர்.என்.ரவி மாற்றப்பட்டுள்ளது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டது. இதையடுத்து, தமிழகத்தின் புதிய ஆளுநராக (பொறுப்பு) கேரள மாநில ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து மாநிலம் மாற்றப்பட்டுள்ள ஆளுநர் ஆர்.என்.ரவி விரைவில் மேற்கு வங்கத்திற்கு செல்லவுள்ளார். இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 11 மணிக்கு கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு சென்று ஆர்.என்.ரவியை மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்து, திருவள்ளுவர் சிலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். ஆர்.என். ரவியும் முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்.

## தி.மு.க. கூட்டணிக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாற்று கூட்டணி உருவாகவில்லை: திருமாவளவன்”,



சென்னை, மார்ச். 8–

“விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தொகுதி பங்கீடு தொடர்பாக திமுக ஒவ்வொரு கட்சியாக அழைத்து பேசிக் கொண்டிருக்கிறது. எங்களையும் அழைத்து பேசுவார்கள். பேச்சுவார்த்தை சுமூகமாக சென்று கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சிகள் அதிர்ச்சியடையும் வகையில் திமுக கூட்டணி கட்டுக்கோப்பாக இருக்கிறது.நாளுக்குநாள் புதிய கட்சிகள் இணைந்து கூட்டணியை வலிமைப்படுத்தி கொண்டிருக்கின்றன. திமுக கூட்டணிக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழகத்தில் இன்னும் மாற்று கூட்டணி உருவாகவில்லை. தமிழக மக்களின் பேராதரவுடன் திமுக கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.புகழ்பெற்ற நடிகர் என்பதால் ஊடகங்கள் கூடுதலான முக்கியத்துவத்தை தந்து கொண்டு இருக்கின்றன. அவரால் தமிழ்நாடு அரசியல் தலைகீழாக மாறப் போகிறது என்ற தோற்றத்தை திட்டமிட்டே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு மக்கள் மற்ற மாநிலங்களை ஒப்பிட்ட வரைவில் அரசியல் விழிப்புணர்வு உள்ளவர்கள். கடந்த காலத்தில் சினிமா என்ற ஒரு மயக்கத்தில் தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்ததுபோல், தற்போதைய சூழ்நிலையில் அப்படி வாக்களிக்க வாய்ப்பு இல்லை.

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.”,

# அரசு பொதுத் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி வழங்கிய ஆசிரியருக்கு M.P இரவிக்குமார் பாராட்டு..



விழுப்புரம், மார்ச்.8–

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த கல்வி ஆண்டு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி வழங்கிய தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா , கடந்த மாதத்தில் விழுப்புரம் அரசு மாதிரி மகளீர் மேனிலைப் பள்ளியில் நடந்தது. மாவட்ட ஆட்சியர்.ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான் இ.ஆ.ப அவர்கள் பாராட்டுச் சான்றுகளை வழங்கி பாராட்டினார்.

இதற்கான ஏற்பாட்டினை முதன்மைக் கல்வி அலுவலர். ரெ.அறிவழகன் அவர்கள் முன்னிலையில் மாவட்டக் கல்வி அலுவலர்கள் எஸ்.பி.சேகர். இளமதி ஆகியோர் செய்திருந்தனர்.

இதில் பாராட்டுச் சான்று பெற்ற விக்கிரவாண்டி வட்டம், முட்டத்தூரில் தென்னிந்திய திருச்சபை வேலூர் பேராயத்தின் கீழ் செயல்பட்டு வரும். அரசு உதவி பெறும் ஒய்க்காப் மேனிலைப் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் முனைவர். ம.பாபு செல்வதுரை அவர்கள்

அறிவியல் பாடத்தில் 100 சதவீதம் தேர்ச்சி வழங்கியதோடு. 2 மாணவர்கள் 100 க்கு 100 எடுத்திட முறையாக பயிற்சி அளித்துள்ளார். ஆசிரியர் அவர்கள் 06.03.2026 அன்று விழுப்புரம் நாடாளு மன்ற உறுப்பினர் முனைவர். துரை. ரவிக்குமார் அவர்களை அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.




விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அன்னமங்கலம் சங்கமும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடைபெற்று வருகிறது இதில் மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிருக்கான விருது வழங்கும் விழா இதில் சிறப்பு விருந்தினர் தொலைக்காட்சி புகழ் பேராசிரியர் அன்பு அவர்கள் சிறப்புரை ஆற்றினார் தாளாளர் T. கிருஷ்ணன். ML தலைவர் தலைமையில் நடைபெற்றது T. பரமசிவம் துணைத் தலைவர் வரவேற்பு கே.ஹரிகுமார் தலைவர் விருதுகள் வழங்கப்பட்டது ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



சர்தார் வல்லபாய் பட்டேல் அரசு தொடக்கப் பள்ளி சேதராப்பட்டில் அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணியல் விழா மற்றும் கற்றல் கற்பித்தல் பொருட்களின் கண்காட்சி மற்றும் முன்மழலையர் தினவிழா நடைபெற்றது. பள்ளியின் தலைமையாசிரியை ஹேமமாலினி வரவேற்புரை மற்றும் நோக்கவுரையை வழங்கினார். மாநில திட்ட இயக்குநர் எழில் கல்பனா, சமக்ரா சிக்ஷா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். பள்ளி துணை முதல்வர் உமா வாழ்த்துரை வழங்கினார். விழாவிற்கு ஐந்தாம் வட்ட பள்ளித்துணை ஆய்வாளர் புவியரசன் முன்னிலை வகித்தார். மாநில திட்ட இயக்குநர் எழில் கல்பனா விழாவினை துவக்கி வைத்தார். மாணவர்களின் வாசித்தல் மற்றும் எண்ணறிவு செயல்பாடுகளையும், கற்றல் கற்பித்தல் கண்காட்சியையும், முன்மழலையர்களின் கற்றல் பொருட்களின் கண்காட்சியையும் பார்வையிட்டார். சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்கு புத்தகங்களையும் கேடயங்களையும் வழங்கினர். மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி மேன்மேலும் வளரத் தங்களின் வாழ்த்துகளைக் கூறினர். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். ஆசிரியை கௌசல்யா விழாவை தொகுத்து வழங்கினர். விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் அனைத்து ஆசிரியர்களும் ஊழியர்களும் செய்திருந்தனர். இறுதியாக ஆசிரியை சரிதா நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுற்றது.

# "சமையல் எரிவாயு விலை உயர்வை உடனடியாக திரும்ப பெற வேண்டும்! அன்புமணி

"பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்நாடு முழுவதும் வீட்டுப்பயன்பாட்டுக்கானசமையல்எரிவாயு சிலிண்டர் விலை ரூ60 உயர்த்தப்பட்டுள்ளது அதிர்ச்சியளிக்கிறது.சென்னையில் இதுவரை ரூ868.50 ஆக இருந்த எரிவாயு சிலிண்டரின் விலை இப்போது ரூ.928 ஆக அதிகரித்திருக்கிறது.வீட்டுப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டிருப்பது ஏழை மற்றும் நடுத்தர மக்களை மிகக்கடுமையாக பாதிக்கும். வளைகுடாபோர்தான்இந்தவிலைஉயர்வுக்கு காரணம் என்று கூறப்படுகிறதுவளைகுடா போரின் தாக்கம் நீண்ட காலத்திற்கு இருக்காது; விரைவாக இயல்பு நிலை திரும்பி விடும்என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ள நிலையில், தற்காலிகமாக இந்த விலை உயர்வு சுமையை மக்கள் மீது சுமத்தாமல் எண்ணெய் நிறுவனங்களே தாங்கிக் கொள்ள வேண்டும். மக்களை பாதிக்கக்கூடிய சமையல் எரிவாயு விலை உயர்வை எண்ணெய் நிறுவனங்கள் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.",

# சேலம் அரசியலில் புதிய திருப்பம்

# திமுகவில் அமைச்சர் ராஜேந்திரனுக்கு எதிராக கிளம்பிய சீனியர்கள்.



சேலம். மார்ச்.8–

மாம்பழ மாவட்டமான சேலத்தில் தேர்தல் சூழல் சூடுபிடித்துள்ள நிலையில், அரசியல் வட்டாரத்தில் புதிய பரபரப்பு உருவாகியுள்ளது. சேலம் வடக்கு தொகுதியை தொடர்ந்து கைப்பற்றி தற்போது சுற்றுலாத்துறை அமைச்சராக உள்ள ராஜேந்திரன், அடுத்த தேர்தலிலும் வெற்றி பெற முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

ஆனால்,கடந்த காலங்களில் கட்சிக்காக இணைந்து செயல்பட்ட முக்கிய நிர்வாகிகளை தற்போது அவர் புறக்கணித்து வருகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக, முன்னாள் நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி கவுன்சிலர்கள் உள்ளிட்டோர், தங்களை திட்டமிட்டே ஓரங்கட்டப்படுவதாக அதிருப்தி தெரிவித்து வருகிறார்கள்.

2011,2016,2021 ஆகிய சட்டமன்றத் தேர்தல்களில் சேலம் மாவட்டத்தில் கட்சி வலுவாக நிலைத்திருந்தது. அதில் சேலம் வடக்கு தொகுதியில் ராஜேந்திரன் தொடர்ந்து வெற்றி பெற்றார். அவர் முன்பு பனமரத்துப்பட்டி தொகுதியிலிருந்து சேலம் வடக்கு தொகுதிக்கு மாறியதும், அப்பகுதியில் வலுவான எதிர்க்கட்சித் தலைவர்களை எதிர்கொள்ளும் அரசியல் திட்டத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்பட்டது.

ஆனால் தற்போது, அவருக்கு ஆதரவாக இருந்த சில முக்கிய நிர்வாகிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும், சிலர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.வரவிருக்கும் 2026 தேர்தலில் யார் வேட்பாளராக நிற்பார்கள் என்ற விவகாரமும் உட்கட்சிப் போட்டியை அதிகரித்துள்ளது.

சேலம் வடக்கு தொகுதியில் வன்னியர், ஆதிதிராவிடர்,சிறுபான்மை சமூகங்கள் மற்றும் அரசு ஊழியர்கள் போன்ற பல்வேறு வாக்காளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். கடந்த தேர்தல்களில் சில பகுதிகள் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்ததாகவும், அந்த பகுதிகளில் உள்ள நிர்வாகிகளின் அதிருப்தி அடுத்த தேர்தலில் தாக்கம் ஏற்படுத்துமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

மாநகராட்சி கவுன்சிலர்கள் மற்றும் சில மூத்த நிர்வாகிகள் ஒன்றிணைந்து கட்சி தலைமையை சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அதே நேரத்தில்,கட்சியின் வெற்றிக்காக ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்ற கருத்தும் மற்றொரு தரப்பில் வலியுறுத்தப்படுகிறது.

இந்நிலையில்,உட்கட்சிப் பிளவு தீருமா? அல்லது அடுத்த தேர்தலில் இது தாக்கத்தை ஏற்படுத்துமா? என்பது அரசியல் வட்டாரத்தில் கவனிக்கப்படும் முக்கிய அம்சமாக உள்ளது.

# மகளிர் தின விழா சிறப்பாக நடைபெற்றது.





அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு ஒன்றியத்தில் பணிபுரியக்கூடிய அனைத்து மகளிர்களும் 7/3/2026 காலை ஒருமித்த சீருடை அணிந்து மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள் இதற்கு எஸ் ஜாகிர் உசேன் வட்டார வளர்ச்சி அலுவலர் வட்டார ஊராட்சி அவர்கள் இன்று போல் என்றும் மகிழ்ச்சியுடன் அரசு பணிகளை கடமையுடன் பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்தி அனைவருக்கும் ஒரு சிறிய அன்பளிப்பாக பேனா எழுது பொருள் வழங்கினார்கள் மேலும் இந்த நிகழ்ச்சியில் அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோவை மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகள் 3 பேருக்கு சாகும் வரை சிறை தண்டனை விதித்து உத்தரவு

கோவை : மார்ச்.8–

கோவை மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகள் 3 பேருக்கு சாகும் வரை சிறை தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 3 பேரும் குற்றவாளிகள் என கோவை மகிளா நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில் தண்டனையையும் அறிவித்தது. குற்றவாளிகள் சதீஷ், கார்த்திக், தவசி ஆகியோருக்கு சாகும் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# சிறுமி பலாத்கார கொலை வழக்கு பெண் இன்ஸ்பெக்டர் அதிரடி சஸ்பெண்ட்.

சேலம்: மார்ச். 8–

கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி போலீஸ் ஸ்டேசன் எல்லைக்குட்பட்ட பகுதியில் டிசம்பர் மாதம் இரண்டரை வயது சிறுமி மூச்சு திணறி உயிரிழந்ததாக கூறப்பட்டது.

ஆனால் அச்சிறுமி பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு இறந்துள்ளது தெரியவந்தது. இதுகுறித்த தகவலின்பேரில் அஞ்செட்டி இன்ஸ்பெக்டர் சுமித்ரா விசாரணை நடத்தினார். இதில் அச்சிறுமியின் தாயின் கள்ளக்காதலன் பெரியநாயகம் (40) சிறுமியை பாலியல் கொடுமை செய்ததில் இறந்தது தெரியவந்தது.

இதற்கிடையில் இன்ஸ்பெக்டர் சுமித்ரா, சேலம் மாநகரம் அம்மாபேட்டை மகளிர் போலீஸ் ஸ்டேஷனுக்கு மாற்றப்பட்டார். இவர், சிறுமி பாலியல் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் முறையாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இது தொடர்பாக சேலம் சரக டிஐஜி சந்தோஷ் ஹடிமணி விசாரணை நடத்தி, மாநகர போலீஸ் கமிஷனர் அனில்குமார்கிரிக்கு அறிக்கை அனுப்பினார்.

இதையடுத்து இன்ஸ்பெக்டர் சுமித்ராவை சஸ்பெண்ட் செய்து கமிஷனர் உத்தரவிட்டார். இதேபோல், சேலம் மாநகரம் சூரமங்கலம் ஸ்டேசனில் எஸ்.ஐ.யாக பணியாற்றி வந்த மோனிகா, தூத்துக்குடி மாவட்டத்திற்கு அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நிர்வாக காரணங்களுக்காக அவர் மாற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சி :



திருவள்ளூர் மார்ச் 08 :

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பல்நோக்கு கூட்டரங்கில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் காணொளி காட்சி வாயிலாக மின்னனு திரையில் பார்வையிட்டு, பின் விசன் 2030 திருவள்ளூர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஐந்தாண்டு சாதனை மலர்களை வெளியிட மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), டி.ஜெ.கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), துரைசந்திரசேகர் (பொன்னேரி), மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா,கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ப.ஜெயஸ்ரீ மற்றும் பல்துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். அதனைத்தொடர்ந்து, திருவள்ளூர் வட்டம், வேப்பம்பட்டில் நெடுஞ்சாலைகள் துறை சார்பில் ரூ.56 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 13 கட்டுமானப் பணிகளையும், செவ்வாய்பேட்டையில் ரூ.8.1 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 15 கட்டுமானப் பணிகளையும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# பாரம்பரிய வடமாடு மஞ்சுவிரட்டு காளைகள் மையப்படுத்தி நடிகர் விமல் நடித்த வடம் திரைப்படம் தமிழக முழுவதும் ரிலீஸ் சினிமா ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு



கோவை மார்ச் 8

வெற்றி விநாயகா பிக்சர்ஸ் பிரபு மற்றும் மாசாணியம்மன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பாளர் ராஜசேகர், இணை தயாரிப்பாளர் சங்கர் தயாரிப்பில், கேந்திரன் இயக்கத்தில், இமான் இசையில் கதாநாயகனாக விமல், கதாநாயகியாக சன்சிகா ஸ்ரீ மற்றும் நட்டி என்ற நட்ராஜ் ஆகிய நடிகர்கள் நடித்த தென் மாவட்டங்களின் பாரம்பரிய வடமாடு மஞ்சுவிரட்டு காளையை மையப்படுத்தி பொள்ளாச்சி, கோவை, உடுமலை போன்ற பகுதியில் எடுக்கப்பட்ட வடம் திரைப்படம் தமிழக முழுவதும் 400க்கும் மேற்பட்ட திரையரங்கில் திரையிடப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக கோவை கங்கா,யமுனா திரையரங்கில் திரையிடப்பட்ட வடம் திரைப்படத்தை சினிமா ரசிகர்கள் திரைப்படத்தை பார்த்தனர். தென் மாவட்டங்களில் பிரபலமாக உள்ள பாரம்பரிய வடமாடு மஞ்சுவிரட்டு போட்டிகள் கொங்கு மண்டல பகுதியில் உள்ள மக்களுக்கும் தெரிய வேண்டும் என்ற நோக்கில் இந்தத் திரைப்படம் அமைந்துள்ளதாகவும், திரைபடம் ஆரம்ப முதல் கடைசி வரை இமான் இசையில் காதல், சண்டை, சென்டிமென்ட்,பாடல் காட்சிகள் மற்றும் காளைகள் வரும் காட்சிகள் அனைத்தும் கிராமிய பகுதிகள் நிறைந்து காணப்படுவதால் ரசிகர்களிடையே வடம் திரைப்படம் நல்ல வரவேற்பு இருப்பதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

# புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி தலைமையிலும், மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா முன்னிலையிலும் திமுக அவசர ஆலோசனை கூட்டம்: கூடுதல் தொகுதிகளை கேட்டுப்பெற நிர்வாகிகள் வலியுறுத்தல்



புதுச்சேரி, மார்ச். 8–

புதுச்சேரி மாநில சட்டமன்ற தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில், திமுகவினர் தேர்தல் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் புதுச்சேரி மாநில கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் நேற்று முன் தினம் மாலை எல்லைப் பிள்ளைச்சாவடியில் உள்ள அக்கார்டு ஓட்டலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கழக கொள்கை பரப்புச் செயலாளரும், புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளருமான ஜெகத்ரட்சகன் எம்.பி தலைமை வகித்தார். சட்டமன்ற எதிர்கட்சித் தலைவரும், மாநில கழக அமைப்பாளருமான இரா. சிவா முன்னிலை வகித்தார். இதில் காரைக்கால் மாநில திமுக அமைப்பாளர் நாஜிம் எம்எல்ஏ, அவைத்தலைவர் எஸ்.பி. சிவகுமார், துணை அமைப்பாளர் அனிபால் கென்னடி எம்எல்ஏ, பொருளாளர் செந்தில்குமார் எம்எல்ஏ, இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத் எம்எல்ஏ, நாகதியாக ராஜன் எம்எல்ஏ, மாநில துணை அமைப்பாளர்கள் தைரியநாதன், ஏ.கே. குமார், காலப்பட்டு தொகுதி செந்தில் என்கிற ரமேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் புதுச்சேரியில் திமுக எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது, எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் கடந்த தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளை விட இம்முறை கூடுதல் தொகுதிகளில் போட்டியிட வேண்டுமென நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

முன்னதாக இன்று காலை லப்போர்த் வீதியில் உள்ள மாநில கழக தலைமை அலுவலகத்தில், மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா தலைமையில், திமுக எம்எல்ஏக்கள் மற்றும் மாநில கழக நிர்வாகிகள் பங்கேற்ற தேர்தல் தொடர்பான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

# ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் உருளையன் பேட்டை தொகுதி நிர்வாகிகள் பட்டியல் ஆர் எல் வெங்கட்ராமன் வெளியிட்டார்.

புதுச்சேரி, மார்ச்.8–

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த மாதம் பதினாறு தொகுதிகளுக்கான தலைவர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது. இவற்றில் கடந்த வாரம் முதலியார்பேட்டை தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள். அறிவிக்கப் பட்டனர். அதனை தொடர்ந்து தற்போது புதுச்சேரி நகர பகுதியை ஒட்டியுள்ள உருளையன்பேட்டை தொகுதி தலைவராக நியமிக்கப்பட்ட



S. சூர்யா அவர்கள் தலைமையில் தொகுதி நிர்வாகிகள் 13 பேரும், தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் 12 பேரும் மொத்தம் 25 பேர் கொண்ட தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அறிவிக்கப் பட்டுள்ளனர்.

புதுச்சேரி உருளையன் பேட்டை தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பட்டியல்.!!!.

தலைவர் : S. சூர்யா , துணைத் தலைவர்கள் : 1.பிரசாந்த். 2.சல்மான். பொதுச்செயலாளர் : 1. மணிகண்டன். பொருளாளர் : 1.L. சிவா . செயலாளர்கள் : 1.E.பிரபாகரன். 2.விஜய பிரபு. இணைச் செயலாளர்கள் : 1.L.செல்வம்.

2.கலைவாணன். உதவி செயலாளர்கள் : 1.மணிவண்ணன் .2.மணிகண்டன் . துணை செயலாளர்கள்: 1.S.உதயகுமார் .2.விஷ்ணு. உருளையன் பேட்டைதொகுதி செயற்குழு உறுப்பினர்கள். 1.R.பிரபு . 2.மூர்த்தி . 3.R.முத்துக்குமார். 4.ஸ்ரீபன் . 5.கிருஷ்ணகுமார் . 6.அர்ஜுன். 7.S.பிரகாஷ். 8.ரமணா. 9.செல்வம். 10.சுபாஷ். 11.அருண். 12.தினேஷ். மேற்கண்டவாறு 25 பேர் கொண்ட உருளையன்பேட்டை தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களை ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் என்ற முறையில் வெளியிட்டுள்ளேன். ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் அனைவரும் மேலே அறிவிக்கப்பட்டுள்ள உருளையன்பேட்டை தொகுதி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

# புதுச்சேரி மாநில பாரதிய ஜனதா கட்சி சார்பாக "உங்கள் விருப்பம் எங்கள் வாக்குறுதி" எனும் கருத்து கேட்பு நிகழ்ச்சி நடைபெற்றது



புதுச்சேரி, மார்ச். 8–

புதுச்சேரி மாநில பாரதிய ஜனதா கட்சி சார்பாக, எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் தேர்தல் வாக்குறுதியாக இடம் பெறச் செய்வதற்காக, மாநிலம் முழுவதும் பொதுமக்களிடம் "உங்கள் விருப்பம் எங்கள் வாக்குறுதி" எனும் கருத்து கேட்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக அனைத்து சமுதாய மக்களையும் தனித்தனியாக சந்தித்து கருத்து கேட்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் (05.03.2026 வெள்ளிக் கிழமை), விஸ்வகர்மா சமுதாய மக்களிடம் உங்கள் விருப்பம் எங்கள் வாக்குறுதி எனும் கருத்து கேட்பு நிகழ்ச்சி, புதுச்சேரி உள்ள தனியார் ஹோட்டலில் பாரதிய ஜனதா கட்சி மாநில தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான V.P.ராமலிங்கம் ஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சபாநாயகர் ஏம்பலம் செல்வம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில், விவசாய அணி அணி மாநில தலைவர் பாரதிமோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

பட்டியல் அணி மாநில தலைவர் காத்தவராயன் அவர்கள், தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் மக்கள் நலத் திட்டங்களை வீடியோ காட்சி வாயிலாக விளக்கினார்.

இதர பிற்படுத்தப் பட்டோர் அணி மாநில தலைவர் கோவேந்தன் அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

இறுதியில் பட்டியல் அணி மாநில துணைத்தலைவர் .ரமேஷ் பாஷ்யம் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

மேலும் நிகழ்ச்சியில், பட்டியல் அணி மாநில செயலாளர் கார்த்திகேயன் அவர்கள், விவசாய அணி மாநில துணைத்தலைவர் முத்து அவர்கள், விவசாய அணி மாநில செயற்குழு உறுப்பினர் விக்னேஷ் அவர்கள், கலையரசன் அவர்கள், மணிகண்டன் அவர்கள், இதயமணி அவர்கள், குப்பன் அவர்கள், லட்சுமி அவர்கள், வள்ளி அவர்கள், அகிலாண்டேஸ்வரி அவர்கள் உள்ளிட்ட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பெருமளவில் கலந்து கொண்ட விஸ்வகர்மா சமுதாய மக்கள் தங்களது கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்துக் கொண்டனர்.

# வில்லியனூர் அரசு மருத்துவமனையில் 14 வயதுடைய பெண்களுக்கு இலவச ஹெச்பிவி தடுப்பூசி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !



புதுச்சேரி, மார்ச்.8

மத்திய அரசின் சுகாதாரத்துறை 14 வயதுடைய பெண்களுக்கு கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்க இலவச ஹெச்பிவி தடுப்பூசி போட உத்தரவிட்டத்தின் அடிப்படையில் புதுச்சேரியில் 14 வயதுடைய பெண்களுக்கு இலவச ஹெச்பிவி தடுப்பூசி ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் செலுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி வில்லியனூர் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற இலவச ஹெச்பிவி தடுப்பூசி செலுத்தும் முகாமை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்து, தடுப்பூசி எடுத்துக் கொண்ட பெண்களுக்கு சான்றிதழ் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், டாக்டர் பாமகள் கவிதை, டாக்டர் ரவிவர்மன், மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர் செல்வநாதன். தர்மராஜ், வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், அயலக அணி அமைப்பாளர் ஷாஜகான், தொமுச தலைவர் அங்காளன், விவசாய அணி துணை அமைப்பாளர் காசிநாதன், தொகுதி துணை செயலாளர் ஜெகன்மோகன், தொகுதி செயற்குழு உறுப்பினர் ஏழுமலை, தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சபரிநாதன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சிலம்பரசன், ரகு, சூர்யா, ஷர்மா, சிலம்பு, மணிகண்டன், கிளைக் கழக நிர்வாகிகள் ராஜி, மிலிட்டரி முருகன், ரகுமான், திலகர், கார்த்திகேயன், பாலா, அன்பு, குட்டி, கார்த்தி, மோனிஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# லட்சிய ஜனநாயக கட்சி: புதுச்சேரி மாநில இளைஞரணி மற்றும் தொண்டரணிக்கு புதிய நிர்வாகிகள் நியமனம்!

புதுச்சேரி: மார்ச்.8

லட்சிய ஜனநாயக கட்சியின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், புதுச்சேரி மாநிலத்திற்கான முக்கியப் பொறுப்புகளுக்கு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வகையில் மாநில இளைஞரணி துணைத் தலைவர்: திரு. சர்மா மாநில தொண்டரணி துணைத் தலைவர்: திரு. வேல்முருகன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



தங்கள் மீது நம்பிக்கை வைத்து இந்தப் பொறுப்புகளை வழங்கிய லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் திரு. தோஸ்த் சார்லஸ் மார்ட்டின் அவர்களுக்கு, சர்மா மற்றும் வேல்முருகன் ஆகிய இருவரும் தங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர். கட்சியின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், இளைஞர்கள் மற்றும் தொண்டர்களை ஒருங்கிணைத்து செயல்படுவதிலும் தாங்கள் தீவிரமாக ஈடுபடப்போவதாக புதிய நிர்வாகிகள் உறுதி அளித்துள்ளனர்.

# பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நினைவு நாள்: மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் திமுகவினர் புகழஞ்சலி!



கழக முன்னாள் பொதுச்செயலாளர் மறைந்த இனமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி புதுச்சேரி மாநில திமுக சார்பில், லப்போர்த் வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் தலைமையில் திமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில கழக துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# நீயூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 40வது தேசியப் புத்தகக் கண்காட்சியினை புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் வி.முத்து திறந்து வைத்தார் ...



புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் குறள் அரங்கத்தில் நீயூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 40வது தேசியப் புத்தகக் கண்காட்சியினை கலை இலக்கியப் பெருமன்ற தலைவர் எல்லை. சிவக்குமார் தலைமையில் புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து திறந்து வைத்தார். உடன் பேராசிரியர் ஜெயசீல ஸ்டீபன், மண்டல மேலாளர் ஆர்.எம்.தனசேகரன், பாலகங்காதரன், ந.மு.தமிழ்மணி, ப.திருநாவுக்கரசு, மேலாளர் முருகேசன், வேணு. ஞான மூர்த்தி,பிரீதா விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

# மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிய ஒருங்கிணைந்த மையங்களே தீர்வு: புதுச்சேரி சென்னை பிரஸ்ட் சென்டர் மருத்துவர்கள் வலியுறுத்தல்!

புதுச்சேரி, மார்ச் 8

இந்தியாவில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப் படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், நோயைக் கண்டறிவதில் நிலவும் சவால்கள் குறித்து சென்னை பிரஸ்ட் சென்டர் (Chennai Breast Centre) முக்கிய விழிப்புணர்வு தகவல்களை வெளியிட்டுள்ளது.



தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்வதால் நோய் கண்டறிதலில் தாமதமும், சிக்கல்களும் ஏற்படுகின்றன. குறிப்பாக இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மேம்பட்ட பரிசோதனை வசதிகள் இல்லாதது ஒரு முக்கிய காரணமாகும். இது குறித்து மையத்தின் முதுநிலை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வி ராதாகிருஷ்ணா கூறுகையில்:

"மருத்துவரின் நேரடிப் பரிசோதனை, ஸ்கேனிங் மற்றும் திசுப் பரிசோதனை (Biopsy) ஆகிய மூன்றும் ஒரே கூரையின் கீழ் வழங்கப்படுவதன் மூலமே துல்லியமான மற்றும் விரைவான நோய் கண்டறிதலைச் சாத்தியமாக்க முடியும்."

அண்மையில் 12,000 நோயாளிகளிடம் நடத்தப்பட்ட ஆய்வில், வெளியில் செய்யப்படும் திசுப் பரிசோதனைகளில் 25% பேருக்கு மறுபரிசோதனை தேவைப்படுவதும், அவர்களில் 62% பேருக்குப் புற்றுநோய் உறுதி செய்யப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, மார்ச் 2026 மாதம் முழுவதும் அதிநவீன '3D டிஜிட்டல் டோமோகிராபி மேமோகிராபி' பரிசோதனை மூன்றில் ஒரு பங்கு (1/3) கட்டணத்தில் வழங்கப்படுகிறது.

புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், சிதம்பரம் மற்றும் திண்டிவனம் பகுதி மக்கள் இலவச மருத்துவ ஆலோசனைகளைப் பெற +91 99400 49034 என்ற பிரத்யேக உதவி எண்ணை சென்னை பிரஸ்ட் சென்டர் அறிமுகப்படுத்தியுள்ளது.

பிளாஸ்டிக் மற்றும் புனரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வெங்கட் ராமகிருஷ்ணன் பேசுகையில், இந்தியாவில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப் படுவோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியுள்ளதாகவும், இதில் 55% பேர் பெண்கள் என்றும் குறிப்பிட்டார்.

விழிப்புணர்வு இன்மை காரணமாகப் பலர் மார்பகத்தை முழுமையாக அகற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால், ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் மார்பகத்தைப் பாதுகாக்கலாம்.

மார்பகத்தை அகற்றும் போதே நோயாளியின் சொந்த திசுக்கள் அல்லது சிலிக்கான் இம்ப்ளான்ட்டுகள் மூலம் மார்பகப் புனரமைப்பு செய்ய முடியும். இந்த நவீன சிகிச்சையின் வெற்றி விகிதம் 99% ஆகும்.

சிகிச்சை முடிந்து குணமடைந்த பிறகான வாழ்க்கை முறையை மேம்படுத்த 'ஹகுனா மடாடா' என்ற பெயரில் ஒரு தன்னார்வ சேவையை இந்த மையம் நிறுவியுள்ளது. இது புற்றுநோயிலிருந்து மீண்டவர்களுக்கு உணர்வு ரீதியான ஆதரவையும், துல்லியமான தகவல்களையும் வழங்கி அவர்களின் நீண்ட கால நல்வாழ்வை உறுதி செய்கிறது.

# அரியலூர் நகராட்சியில் ரூ.11.58 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தினை அமைச்சர் கே.என்.நேரு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் திறந்து வைத்தார்

அரியலூர், மார்ச். 8

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.11.58 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் .கே.என்.நேரு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் (07.03.2026) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டார்.

புதிய பேருந்து நிலையத்தினை திறந்து வைத்த பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு, முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் அரியலூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு இன்றையதினம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் இப்பகுதிக்கு வருகை தந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பழைய பேருந்து நிலையத்தினை பார்வையிட்ட பின்னர் உடனடியாக புதியதாக பேருந்து நிலையம் கட்டுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து இன்றையதினம் சிறப்புமிகு பேருந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையம் அமைப்பதில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும் அதனை சரிசெய்து, பணிகளை முடிவுற செய்து மிகச்சிறப்பான முறையில் பேருந்து நிலையத்தினை அமைத்து கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் புதிய பேருந்து நிலையம் கட்டுமான பணிகளை பலமுறை நேரடியாக ஆய்வு செய்து, அறிவுரைகளை வழங்கியதுடன், அவர்களுடைய நேரடி மேற்பார்வையில் இப்பேருந்து நிலையம் அமையப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரம் இலால்குடிக்கு வருகை தந்து அங்கு புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தினை திறந்த வைத்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை அழைத்து அரியலூர் நகராட்சி பேருந்து நிலையம் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு அங்கு பிரச்சனைகளை உடனடியாக தீர்வு காண்பதற்கு வேண்டிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். இப்பேருந்து நிலையம் அமைவதற்கு தனது முழு பங்களிப்பையும் வழங்கி திறந்து வைத்துள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்தபோது ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டமாக இருந்த அரியலூர் பகுதிக்கு பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை வழங்கியதை போன்றே தற்போதும் அரியலூர் மாவட்டத்தினை தனது சொந்த மாவட்டமாக நினைத்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அரியலூர் நகராட்சியில் உள்ள சாலைகள் அனைத்தும் தார் சாலைகளாகவும், சிமெண்ட் சாலைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளது. புதிய மார்க்கெட் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகளும் நடைபெற்று கொண்டிருக்கிறது. அரியலூர் மாவட்டத்தை அமைத்து கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினை ஏற்படுத்தியும், புறவழிச் சாலைகள் அமைத்து நகரம் என்ற அந்தஸ்து வருவதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தான் காரணமாகும். அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் அரியலூர் மாவட்டம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை கண்டுள்ளது. எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.



அதனைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் புதியதாக பேருந்து நிலையம் கட்டப்பட்டு, திறக்கப்பட்டுள்ளது தான் திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பாகும். குறுகிய அளவில் இருந்த பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்து புதிய பேருந்து நிலையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மொத்தம் 138 நகராட்சிகள் இருந்தது. தற்போது தமிழ்நாட்டில் 145 நகராட்சிகளாக உயர்ந்திருக்கிறது. 15 மாநகராட்சி கள் இருந்தன. இப்பொழுது 25 மாநகராட்சிகளாக உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ 479 பேரூராட்சிகள் இருக்கிறது. கிராமத்தினை விட நகரத்தில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதன் காரணமாக நகரத்தில் அதற்கான வசதிகளை பொதுமக்களுக்கு கொண்டுவர வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து இந்த இலாக்காவிற்கு எல்லா நகரங்களிலும் புதிய பேருந்து நிலையங்கள், எல்லா நகரங்களிலும் மார்கெட் கட்டப்பட்டுள்ளன. அடிப்படை கழிவறை வசதி, மழைநீர் வடிகால்கள், சாலைகள் என மக்களுக்கான அனைத்து திட்டங்களையும் நகராட்சிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையில் அரியலூர் நகராட்சியில் பேருந்து நிலையம் அமைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சி.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறை அமைச்சர். அதற்கு பின்னர் சில அமைச்சர்கள் போக்குவரத்து துறை அமைச்சர்களாக இருந்திருக்கிறோம். அதனை தொடர்ந்து இன்றைக்கு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் பணிகளை மேற்கொண்டு தாழ்தளப் பேருந்து, மின்சாரப் பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள். திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் அமைச்சர் பதவியினை வழங்கி வருகிறார்கள். மின்துறை என்பது மக்களுக்கானது. எவ்வளவு குறைவான கட்டணத்தில் வழங்க வேண்டுமோ அத்தகைய அளவில் வழங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை பணிகளை சிறப்பாக அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை உருவாக்கினார்கள். அப்பொழுது ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டது. அதற்கு பிறகு உள்ளூர் பகுதிகளில் நீர் எடுக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலம் வழங்கப்பட்டது. பின்னர் ஆறுகளில் கிணறுகள் அமைத்து அனைத்து பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் வரை தமிழ்நாட்டில் இருக்கின்ற 4 கோடியே 28 இலட்சம் மக்களுக்கு தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. கடந்த 5 ஆண்டு காலத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் 1 கோடியே 30 இலட்சம் நபர்களுக்கு கூடுதலாகவும், தற்போது 1 கோடியே 30 பேருக்கு கூடுதலாகவும், மேலும் 1 கோடி நபர்களுக்கு வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

50 ஆண்டுகள் ஆன பிறகு குடிநீர் குழாய்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளன. அதனை சீரமைத்து குடிநீரை அதிகளவில் வழங்குவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை, கோவை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், நாகபட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி, சேலம் உள்ளிட்ட எல்லா பகுதிகளுக்கும் பெரிய நகரங்களில் தேவையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 5 ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஆட்சிப்பொறுப்பேற்றால் 7 கோடியே 80 இலட்சம் வீடு கட்டி தரப்படும் என அறிவித்துள்ளார்கள். நீண்ட காலம் பட்டாக்கள் கிடைக்கப்பெறாவர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. பட்டாக்கள் வழங்குவதோடு மட்டுமல்லாமல் புதிய வீடுகளையும் கட்டி தந்துள்ளார்கள். 2 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1 இலட்சம் வீடுகள் கட்டும் பணிகள் நடைபெறுகிறது. திராவிட மாடல் ஆட்சி மிகச்சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. இப்பேருந்து நிலையமானது கோ. சிவப்பெருமாள் பேருந்து நிலையம் என்று இருந்தது. மீண்டும் கோ.சிவப்பெருமாள் பேருந்து நிலையமாகவே செயல்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசித்து அவை மேற்கொள்ளப்படும். எனவே அனைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர்மன்றத் தலைவர் திருமதி. சாந்தி கலைவாணன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ் சாவூர் திருமதி.விஜயலெட்சுமி, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பிரேமி, நகராட்சி பொறியாளர் (பொ) த.ராஜகோபாலன், அரியலூர் வட்டாட்சியர் திருமதி.தேவகி. அரியலூர் நகராட்சி ஆணையர் அசோக்குமார், நகர்மன்ற உறுப்பினர்கள், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரியில் உலக மகளிர் தின விழா கொண்டாட்டம்: கலைமாமணி முனைவர் முத்து பங்கேற்பு..!



வந்தவாசி, மார்ச் 08:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரி சார்பில் உலக மகளிர் தின விழா கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு கல்லூரி தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து தலைமை தாங்கினார். கல்லூரி நிர்வாக இயக்குநர் பா.போஸ், பொருளாளர் எஸ்.பழனி சாமி ஆகியோர் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் இரா. ஏழுமலை வரவேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக, உலக தாரகை தமிழ்ச் சங்க நிறுவனர் சுகந்தீனா, இலங்கை திரைப்பட நடிகை நவயுக குகராஜா, ஸ்ரீ சாய் பிலிம்ஸ் நிறுவனர் டாக்டர் மாலதி நாராயண், ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர். மேலும் புதுவை தமிழ்ச் சங்க செயலாளர் பாவலர் சீனு.மோகன் தாசு, தமிழ்நாடு பனை மரங்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு நிறுவனர் எம்.ஏ.தாமோதரன், புதுவை தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ர.ஆனந்தராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, காஞ்சிபுரம் குமாரி ஹர்ஷி வஜ்ஜரவேல் குழுவினரின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. மேலும் வந்தவாசி பகுதியில் சிறப்பாக பணியாற்றிய பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 20 ஆசிரியைகளுக்கு 'அறிவுத் திருக்கோயில் விருது' வழங்கப்பட்டது. அரூர் கலை நிலா குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மகளிர் தின சிறப்பு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப் பட்டது. மேலும் 214 அதிகாரங்கள், 2140 குறள் வெண்பா படைத்த தாரகைக் குறள் நூலாசிரியர் சுகந் தீனாவுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில் கல்லூரி இயக்குனர்கள், பேராசிரியர்கள், அலுவலக பணி யாளர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.

## தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்காக விசாகப்பட்டினத்தில் இருந்து துணை ராணுவம் வருகை!!

சென்னை : மார்ச்.8–

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்காக விசாகப்பட்டினத்தில் இருந்து துணை ராணுவம் வருகை புரிந்துள்ளனர். 70 பேர் கொண்ட சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் சென்னை கே.கே.நகரில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சென்னை வண்ணாரப்பேட்டை, கிண்டியில் துணை ராணுவத்தினர் 131 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## வீட்டு பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ.60 உயர்ந்து ரூ.868.50ல் இருந்து ரூ.928.50ஆக விற்பனை!

சென்னை: மார்ச்.8

LPG கேஸ் சிலிண்டர் விலை உயர்ந்துள்ளது. ஈரான் அமெரிக்க போர் சூழல் நிலவும் நிலையில், நள்ளிரவில் நாடு முழுவதும் சிலிண்டர் விலை உயர்ந்துள்ளது. ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து போர் தொடுத்துள்ளன. இதனால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடுத்து வரும் தாக்குதலை தொடர்ந்து ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடிவிட்டது.

இதனால் இந்தியா உள்பட பல்வேறு நாடுகளுக்கு கச்சா எண்ணெய் வினியோகம் தடைபட்டுள்ளது.

எனவே இந்தியா குறுகிய காலத்துக்கு ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கிக்கொள்ள அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. இதனிடையே இந்தியாவிடம் போதுமான அளவு கச்சா எண்ணெய், எல்.பி.ஜி. கையிருப்பு உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்திருந்தது. இந்நிலையில், நாடு முழுவதும் நன்னிரவில் கேஸ் சிலிண்டர் விலை திடீரென உயர்ந்துள்ளது.

ஈரான் அமெரிக்க போர் சூழல் நிலவும் நிலையில், நள்ளிரவில் நாடு முழுவதும் சிலிண்டர் விலை உயர்ந்துள்ளது. வீட்டு பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ.60 உயர்ந்து ரூ.868.50ல் இருந்து ரூ.928.50ஆக விற்பனை செய்யப்படுகிறது. 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ.114.50 உயர்ந்து ரூ.2043.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என ஒன்றிய அரசு கூறிவந்த நிலையில், போர் சூழலை பயன்படுத்தி விலையேற்றம் செய்யப்பட்டுள்ளது.



நாமக்கல் மாவடடம் ராசிபுரம் ஊராட்சி ஒன்றியம் அனைபாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## சென்னை எண்ணூரில் பிளஸ் டூ மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த கூலி தொழிலாளிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து திருவள்ளூர் போக்சோ நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு :

திருவள்ளூர் மார்ச் 08 : திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் சுனாமி குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் ராஜா ( வயது 52 ). இவர் கூலி தொழிலாளியான இவர் கடந்த 1910 2019 அன்று ராஜா வீட்டிலிருந்தார். அப்போது அங்கு 16 வயது நிரம்பிய பிளஸ் டூ படிக்கும் மாணவி ஒருவர் மாடிக்கு சென்று உலர வைத்திருந்த துணிகளை எடுப்பதற்காக சென்றுள்ளார். அப்போது அங்கு யாரும் இல்லை என்பதை தெரிந்துக் கொண்ட ராஜா பின்தொடர்ந்து சென்று அந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுக்க முயற்சி செய்துள்ளார்.

இதனால் பதறிப் போன அவர் அலறியடித்து கொண்டு அங்கிருந்து ஓடி வந்து நடந்தது குறித்து தனது பெற்றோரிடம் கூறியுள்ளார்.இது குறித்து அந்த சிறுமியின் பெற்றோர் எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தனர்.போலீசார் இது சம்பந்தமாக வழக்குப் பதிவு செய்து ராஜாவை கைது செய்தனர். இந்த வழக்கு திருவள்ளூரில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞராக புவனேஸ்வரி வாதாடினார்.

இந்த வழக்கில் 16 சாட்சிகள் மற்றும் மாணவியின் வாக்குமூலங்கள் அடிப்படையில் நேற்று திருவள்ளூர் மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி உமாமகேஸ்வரி தீர்ப்பு வழங்கினார். அதில் குற்றம் நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து குற்றவாளியான ராஜாவிற்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூபாய் 8 ஆயிரம் அபராதமும் விதித்தார்.அபராத தொகையை செலுத்த தவறினால் மேலும் ஓர் ஆண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூபாய் ஒரு லட்சம் நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்தார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421